செய்தி வெளியீடு எண்.331 நாள். 29.6.2009

<u>செய்தி வெளியீடு</u>

## மூன்று மகன்களை ஒரேநேரத்தில் பறிகொடுத்த தூத்துக்குடியைச் சேர்ந்த பெற்றோருக்கு 75 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி!

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தூத்துக்குடி நகரில், ஆண்டாள் தெருவில் வசிக்கும் திரு.வெங்கடாசலம் தினக்கூலியாக வேலை செய்து வருபவர். அவருடைய மனைவி திருமதி சாந்தி தமது உடன்பிறந்த தம்பியின் திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சிக்காக தம்முடைய மகன்களுடன் சென்னையை அடுத்த கேளம்பாக்கத்திற்கு வந்திருந்தபொழுது கேளம்பாக்கம் அருகில் பொன்மார் என்ற கிராமத்தில் கல்குவாரி குட்டையில் குளிப்பதற்காகச் சென்ற அவரது மகன்கள் ராஜவேல் (வயது–22), மேகநாதன்(வயது–15), கோபி என்ற கோவிந்தராஜன் (வயது–13) ஆகிய மூவரும் நீரில் மூழ்கி இறந்துவிட்டனர்.

மாண்புமிகு மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்கள், கடந்த 24.6.2009 அன்று தூத்துக்குடிக்குச் சென்றிருந்தபோது, திருமதி.சாந்தி தமது மூன்று மகன்கள் இறந்த துயர சம்பவம் குறித்து அவரிடம் நேரடியாக முறையிட்டு நிவாரண உதவி வழங்கக் கோரி விண்ணப்பம் அளித்தார்.

இதுகுறித்த விவரம் தமது கவனத்திற்கு வந்தவுடன், ஒரேநேரத்தில் மூன்று மகன்களைப் பறிகொடுத்த திரு.வெங்கடாசலம் – திருமதி.சாந்தி தம்பதியரின் நிலைமையை எண்ணிப் பெரிதும் வருந்தி, உயிரிழந்த மூவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 75 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (29.6.2009) ஆணையிட்டுள்ளார்.

****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9